பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# மல்லிக்கொடி

கிழமை வெளியீடு சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குருகுலம், மாம்பாக்கம் ; விசய, பங்குனி; 19—3—54 தளிர்-22

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## வளரும் செல்வம்

நாட்டில், செல்வம் என்று போற்றிக்கொள்ளக் கூடியவை பல உள்ளன; பொருட் செல்வம் எல்லார்க்குந் தெரிந்தது; அது நிலை மாறிக் கெடுகின்ற இயல்புடையதாதலின், கெடாத விழுச் செல்வமாகக் கல்விச் செல்வத்தைப் போற்றிக்கொள்வது மக்கள் கடமையாயுள்ளது; ஆயினும், கேடில்லாத கலைச் செல்வங்களினும், செவிச் செல்வம் தகுதியில் மேம்பட்டதாயிருத்தலின், அவற்றுள் அதனைக் கருத்துடன் போற்றிக் கொள்ளுதல் சிறப்பாகும்.

கேடில்லாமலும் தகுதியாகவும் இருக்கும் இவையெல்லாம் என்றும் ஒரு தன்மையாய் இருப்பவையல்ல; அனைவர்க்கும் இதமே செய்பவையல்ல; பொருள் கல்வி கேள்விகளெல்லாம் நன்மைக்கும் உதவலாம், அல்லதற்கும் கருவியாகலாம். ஆனால் அருட் செல்வம் என்பது இத்தகையதன்று; என்றும் ஒரு தன்மையாகவும் இருக்கும்; இதமே செய்வதாகவும் இருக்கும். ஆதலால் இவ்வெல்லாச் செல்வங்களுள்ளும் அருட்செல்வமே செல்வம் என்று போற்றிக் கொள்ளக் கூடியதாய் இருக்கிறது.

ஆனால், அருட்செல்வம் என்பது அனைத்துயிர்க்கும் பொதுவானது; ஏனையவற்றைப் போல வரப்பு செய்துகொள்ளுதல் இயலாதது. உண்மையில் அச்செல்வம் எல்லாம் வல்ல இறைவனுக்கு உரிமையுடையது. மக்களுடையதன்று. மேலும், அருட்செல்வம் வளரும் இயல்பினதன்று; தாழும் இயல்பினதுமன்று.

ஆகவே, மக்களுக்குரிய செல்வமாயும் அதிலும் தாழ்தல் என்பதின்றி வளரும் நிலையுடையதாயும், இருளிற் செலுத்தாமல் முறை முறையே உயிர்களை வளர்த்தி அருளில் உய்க்கும் ஆற்றல் உடையதாயும் உள்ள தலைசிறந்த செல்வம் வாழ்க்கைக்குத் தேவை! அத்தகையது எது?

'காக்க பொருளா அடக்கத்தை அதனினூங்கு ஆக்கம் இல்லை உயிர்க்கு' என்பது திருவள்ளுவர் அறிவுரை!

ஆக்கம், வளர்ச்சியையுணர்த்துவது. அடக்கமே வளருஞ் செல்வம்! மக்கட்கே உரிய செல்வம்; நன்மைக்கேயன்றி அருளுக்கும் உய்க்கும் செல்வம்!

காக்க பொருளா அடக்கத்தை
ஆக்கம்
அதனினூங் கில்லை உயிர்க்கு.

காக்க பொருளாக அடக்கத்தை—அடக்கப் பண்பை உறுதிப் பொருளாகக் காத்து வருக; ஆக்கம் அதனினூங்கு இல்லை உயிர்க்கு—மக்களுக்கு அதைவிடச் செல்வம்வேறில்லை.

அடக்கம், தக்க செல்வம் என்றபடி. அது, ஏனைச் செல்வங்கள் பெருகுதற்கும் நிலைத்தற்கும் பயன்படுதற்கும் வாயிலாயிருத்தலின் என்க. அடக்கம் என்பது எதனையுந் திறமாகக் கையாளும் வல்லமையாதலின் இவ்வாறு கூறினார்.

காத்தல்—எத்தகைய நேரத்தும் இடத்தும் வழுவாது, கடைப்பிடித்து வருதல். 'ஆக்கம்' என்றார், மேன் மேல் ஆகும் செல்வத்தை, அதாவது வளருஞ் செல்வத்தை.

அறிந்து அடங்கும் செய்கையுடையோர் மக்களேயாதலின், உயிருக்கு என்றது, மக்களுயிரை உணர்த்தும், இது போல்வதைச் சாதி யொருமை என்பர்; அதனினூங்குஇல்லை என்றதனால் அதனை முதன்மையாகக் காத்துவருங் கடமை பெறப்பட்டது.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**6-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(23-10-53 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளிநாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 1 | 0 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| இலை | விசய, பங்குனி, | தளிர் |
|---|---|---|
| 6 | 19-3-54 வெள்ளி. | 22 |


# திருமந்திர மாநாடு

(திருவாவடுதுறையின் அருளுரிமை)

பொருத்தமான உண்மைகள் இருப்பதனால், சிவராசதானி என்று சிறப்பிற் பாராட்டப் பெறும் திருவாவடுதுறை ஆதீனத்தில் இப்போது 21-வது பட்டமாக எழுந்தருளி அருட் செங்கோல் ஓச்சும் குருமகா சந்நிதானம் சிவத்திரு. சுப்பிரமணிய தேசிகசுவாமிகள், அவர்கள், திருவாவடுதுறையில், இவ்வாண்டுக் குருபூசை விழாவுக்குமுன், மூலவராகிய திருமூல தேவர்க்கு விழா வெடுப்பது போலவே, திருமந்திர மாநாட்டைச் சிறப்புற நடத்தத் திருவுளம்பற்றியருளியது அவர்கள் கருணைக்கும் கடமைக்கும் ஒரு பேர் எடுத்துக்காட்டாய் இருந்தது. குருமகா சந்நிதானம் அவர்கள் பட்டத்தில் எழுந்தருளியிருப்பது நாடு செய்த தவம்!

சைவப் பேரசுக்கு 'மெய்கண்ட நூல்கள்' என்னும் சாத்திரமும், 'திருமுறை நூல்கள்' என்னும் தோத்திரமும் சிறப்பின் உரியவை. இவற்றில் திருமுறைகளில் ஒன்றாய் இருக்கும் 'திருமந்திரம்' சாத்திரமும் தோத்திரமுமாய் அமைந்த ஒரு தனிச் சிறப்பு நூல்! அதோடு தனிமையும் பழைமையும் உடையது.

ஆகவே, 'மெய்கண்ட விழா' 'திருமுறை விழா' 'திருமந்திர விழா' என மூன்று வகையாக ஞான விழாக்களை நடத்தும் சிறப்புரிமை ஆதினத்துக்கு உரியது. உரிமையோடு கூடிய இக் கடமைகளில், குருமகா சந்நிதானம் அவர்கள் பட்டத்துக்கு எழுந்தருளிய சில ஆண்டுகட்குள்ளாகவே இஞ் ஞான விழாக்களை நடத்திவருவதி லிருந்து அவர்கள் கருணைத்திறம் நன்கு விளங்குகின்றது.

அதோடு, அவற்றை எங்கெங்கு நடத்த வேண்டுமென்று திருவுளம் பற்றியருளியதும், உண்மை இயைபுடையதாய் இருக்கின்றது.

அண்மையில் 'மெய்கண்ட விழா'வை மெய்கண்ட தேவநாயனார் விளங்கிச் 'சிவஞான போதம்' என்னும் மெய்கண்ட நூலை வழங்கிய திருவெண்ணெய் நல்லூரில் சிறப்பாய் நடத்தினார்கள்;

இப்போது, 'திருமந்திர விழா' வைத் திருமூலதேவர் சிவயோகத் திருந்து 'திருமந்திரம்' என்னும் ஆகமப் பெரு நூலை வழங்கிய திருவாவடுதுறையிலேயே மாட்சி மேவ நடத்தியருளினார்கள்.

இனி, திருமுறைப் பெருவிழாவைத் திருமுறை குரவராகிய சமயாசிரியர் நால்வரும் எழுந்தருளித் தேவார திருவாசகங்களாகிய திருமுறைப் பதிகங்கள் வழங்கப் பெற்றதும், "கடலொலியதான தமிழ் மறைகள் ஓதும், கதலி வனமா"யுள்ளதும், "தமிழ் வேதவெற்"பாய்த் திகழ்வதுமான திருக்கழுக்குன்றத்தில் நடத்தத் திருவுள்ளத்தில் ஆதரவு கொண்டிருக்கின்றார்கள்!

சைவப் பேரசுச் செய்கைகளாகிய இவை, நாடு முழுதும் அருளாட்சி செய்து மன்பதையை உயர்த்துதல் ஒருதலை!

தகுதியைத் தகுதியாகச் செய்து மகிழ்ந்தருளும் பேரியல்பு சான்ற குருமகா சந்நிதானம் அவர்கள், காலத்துக்கேற்றபடி ஏனை விழாக்களைவிட ஞான நூல் விழாக்களில் மிக்க கவனம் செலுத்திவருதலால், திருவாவடுதுறையில் திருமந்திர மாநாட்டைத் தகுமுறையில் நடப்பித்து உதவினர்கள்.

மாநாடு ஆதீனப் பூங்காவினிடையே விழாவுக்கென அழகாக அமைக்கப்பெற்ற 'திருமந்திர மன்றம்' என்னும் அருள் மணங்கமழும் பேரின்பப் பந்தரில் இனிது நிகழ்ந்தது.


Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

உ

திருவருள்!

# குருகுலம், மாம்பாக்கம்; மதுராந்தகம்.

(திருக்குறட் செயலகம்)

*

## சென்னையில் குருகுல விழா!

பேட்டைகளில்

## திருக்குறள் விளக்கச் சொற்பொழிவுகள்!

(முறையே 9 இயல்களும்)

(19—3—54 வெள்ளி முதல் 28—3—54 ஞாயிறு வரை)

# அழைப்பிதழ்.

அன்பினீர்!

இக் குருகுலம் திருக்குறள் அடிப்படையில் இயங்குவது.

இதன் சார்பில் பின்கண்ட நிகழ்ச்சிக் குறிப்புகளின்படி சென்னையில் ஒன்பது இடங்களில் திருக்குறளின் ஒன்பது இயல்களையும், குருகுலக் கொள்கைகள் பணித் திட்டங்களையும் பற்றி ஆக்க விளக்கச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன.

கடைசி நாள் 28—3—54 ஞாயிறன்று, பூக்கடை சென்ன மல்லீசுரர் திருக்கோயிலில் குருகுல விழா நிகழும்.

சென்னை அரசின் முதலமைச்சர்

திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள்.

விழாவைத் தொடங்கி வைக்கவும்

கல்வி நிதி அமைச்சர்

திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்.

தலைமை ஏற்கவும்

உள்ளம் உவந்திருக்கின்றனர்.

பெருமக்களும், பேரறிஞர்களும் நிகழ்ச்சிகளிற் கலந்துகொள்ள அன்புடன் இசைந்திருக்கிறார்கள்.

தாங்கள் அன்புகூர்ந்து தமருடன் வருகை புரிந்து ஈடுபட்டு விழாவைச் சிறப்பிக்கும்படி வேண்டுகின்றோம்.

டி. கோவிந்தராசலு நாயுடு, —குருகுலத்தார்.
வரவேற்புத் தலைவர்.

| | | | |
|---|---|---|---|
| 54 ஞ | மாலை 3 மணி | சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம், தங்கசாலை, தொண்டமண்டலப் பள்ளி எதிரில். | திருகுலத் தொண்டர்கள் கூட்டம்<br>பேசுவோர்:— திருவள்ளுவரகம், ப. இராமநாதப் பிள்ளை அவர்கள். (4-மணிக்கு) |
| 54 ள் | மாலை 6-30 மணி | இறைபணிக் கழகம் இராயபுரம், பனைமரத்தொட்டி முருகன் கோயில். | தலைவர்:— திரு. ஆ. கசபதி நாயகர், எம். எல். சி., அவர்கள்.<br>பேசுவோர்:— சைவத் திருவாளர். பூ. சமரபுரி முதலியார் அவர்கள். |
| 54 ரப் | ,, | திருவேட்டீசுரர் திருக்கோயில், திருவல்லிக்கேணி. | அமைச்சர் திரு. கே. எம். மாணிக்கவேலர் அவர்கள் முன்னிலையில்<br>தலைவர்:— திரு. ஏ. ஜி. வேங்கடாச்சாரி அவர்கள், 'தினமணி' துணையாசிரியர்.<br>பேசுவோர்:— திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள், தலைவர், தமிழரசுக் கழகம். |
| 4 | ,, | ஒய். எம். இ. ஏ. பட்டி மன்றம், நேதாஜி ரோடு, சென்னை. | தலைவர்:— திரு. எஸ். இராச செட்டியார், பி. ஏ., பி. எல்., அவர்கள்.<br>பேசுவோர்:— ஆசிரியர் திரு. இளவழகனார் அவர்கள். |
| 4 ன் | ,, | திருவருள் தவநெறி மன்றம், ஆதிபுரீசுரர் திருக்கோயில், சிந்தாதிரி பேட்டை. | தலைவர்:— அமைச்சர், திரு. கே. இராசாராம் நாயுடு அவர்கள்,<br>பேசுவோர்:— திரு. செல்லமையர் அவர்கள், 'கலைமகள்' துணையாசிரியர். |

# விழா நிகழ்ச்சிகள்

நாள்.— 28-3-54 ஞாயிறு.
இடம்:— சென்னை, பூக்கடை சென்ன மல்லீசுரர் திருக்கோயில்.
முற்பகல்:— காலை 9-30 மணி.

வாழ்த்திசை: இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள்.
வரவேற்புரை: திரு. எஸ். சுவாமிநாதய்யர் அவர்கள்.
கருத்துரை: குருகுலத் தலைவர் ஆசிரியர் இளவழகனர் அவர்கள்.
விழாத் தொடக்கவுரை: சென்னை அரசின் முதலமைச்சர்,
திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள்.
தலைவர்: சென்னை அரசின் கல்வி, நிதி அமைச்சர்
திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்.
திருவள்ளுவர் படத் திறப்பு:
'கல்கி' திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.
நல்லுரை: திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள்,
பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள்.

பிற்பகல்:— 3—4 மணி:
குருகுலத்தார் தனிக்கூட்டம்
மாலை 4-மணி
விழாத் தொடர்ச்சி:—சொற்பொழிவுகள்,
திரு. பூ. ஆலால சுந்தரனர், எம். ஏ., அவர்கள்,
தலைமைத் தமிழ் விரிவுரையாளர், கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்,
—"பண்டைக் குருகுலங்கள்"

திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ. அவர்கள்,
ஆசிரியர், கலைமகள்.
—"குருகுலக் கல்வி".

திரு. டி. செங்கல்வராய பிள்ளை பி. ஏ., எல். டி. அவர்கள்,
தலைமை ஆசிரியர், பச்சையப்பன் உயர்பள்ளி, சென்னை.
—"பன்னிரு பணித்திட்டங்கள்"

ஆசிரியர் இளவழகனர் அவர்கள்,
—"சான்றோர் இயக்கம்" (பெரிய புராணம்)

## பரிசு வழங்கல்:

அமைச்சர். திரு. கே. வேங்கடசாமி நாயுடு அவர்கள்.

## குருகுல வளர்ச்சி:

சைவப் பெரியார் திரு. ச. சச்சிதாநந்தர் அவர்கள்,
தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள்,
பெருநிலக் கிழார் திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள்.

நன்றி கூறலும் வாழ்த்தும்.

# குருகுலத்தார்க்கு!

**ஆருயிர் அன்பரீர் !**

வணக்கம். இத்துடன் வரும் அறிக்கைகள் வழி 19-3-54 முதல் 28-3-54 வரை நம் குருகுலத்தின் சார்பில் நடைபெற இருக்கும் திருக்குறள் விளக்கச் சொற்பொழிவுகளுக்கும், குருகுல விழாவுக்கும் தாங்கள் தமருடன் தவறாமல் வந்து கலந்து கொள்ளவும் சிறப்பிக்கவும் வேண்டும்.

கூட்டங்களுக்கு வரும்போது மறவாமல் குருகுல அடையாளத்தை வாங்கி அணிந்துகொள்ளவேண்டும்.

இந் நிகழ்ச்சிகள் பற்றிப் பலரும் அறிகிற முறையில் கொடிகளிலும், தாள்களிலும் எழுதியும் எழுதுவித்தும், தெருக்களிலும் தக்க இடங்களிலும் பொருத்தியும், தொடர்புடையார்க் கெல்லாம் தெரிவித்தும் தங்களால் இயன்ற அளவு விளம்பரம் செய்தல் வேண்டும் என்றும் பணிவுடன் வற்புறுத்துகின்றேன். இது மிகவும் கட்டாயமானது.

இனி, 28-3-54 ஞாயிறன்று நடைபெறும் விழாவில் கலந்து கொள்ளும் தலைவர்களுக்கும் பொதுமக்களுக்கும், அறிஞர்களுக்கும், குருகுலத்தாரின் பல்வேறு ஆற்றல்களையும் தொகுத்துக் கண்காட்சியாகக் காட்ட விரும்புவதால், அதற்குத் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும கொண்டுள்ள ஆற்றல்களுக்கு அடையாளமான பொருள்களை (ஓவியம், சிற்பம், பல்வேறு கைத்தொழிற்பொருள்கள், கலைப்பண்டங்கள், கண்டுபிடிப்புகள், கவிதைகள், கட்டுரைகள் முதலியன) 21-3-54 ஞாயிறுக்குள் தங்கள் பெயர் முதலியன பொறித்து ஆசிரியரிடம் சேர்க்கவேண்டுகின்றேன். விரும்பினால் அவற்றைத் திரும்பவும் பெற்றுக் கொள்ளலாம்.

விழாவின்போதே, திருக்குறள் அதிகாரச் செய்கைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் ஆர்வமும் தகுதியுமுள்ள குருகுலத்தார், எஞ்சியுள்ள அதிகாரச் செய்கைகளை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். 1954 மார்ச்சு இறுதிக்குள் எப்படியும் எல்லா அதிகாரங்களும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். குருகுலத்தார் அனைவரும் இதையே இறுதி அறிவிப்பாகக் கொண்டு முன்வரவும், ஏற்றவர்களை இணைக்கவும் முயலவேண்டும்.

இங்ஙனம் தங்கள் அன்புள்ள,

சென்னை, 16-3-54 } ந.ரா. ஆடலரசு. குருகுலச் செய்தியாளர்.

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துவ சிரோமணியாக இருந்த ஸ்ரீ சபாபதி நாவலர், தியாகராசச் செட்டியார் முதலியோரிடம் தமிழ்க் கல்வி பயின்றார். ஞான தேசிகராகிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகளிடம் சித்தாந்த சைவ சாஸ்திரங்களையும், திருமந்திரம், தேவார திருவாசக முதலிய அருட்பாக்களையும் நன்கு கற்றுத் தெளிந்தார். திருமுறைகளில் இவருடைய நுண்ணறிவு நன்றாகச் சென்று திளைத்துத் தேக்கிட்டமையின் பலவகையான குறிப்புக்கள் எழுதிச் சேகரித்தார். ஆதீனத்துப் புத்தகசாலையில் உள்ள ஏட்டுச் சுவடிகளில் பலவற்றைத் தமது திருக்கரத்தால் காகிதங்களில் பிரதிசெய்து உயர்ந்த பட்டுக் கட்டிடங்களால் அழகுபடுத்திப் பொன் மூலாம் பூசிப் பாதுகாத்துள்ளார்கள். இசைப் பயிற்சியிலும் இணையற்றவர்கள். சங்கீத சம்பந்தமான சில குறிப்புக்களும் எழுதிவைத்திருக்கிறார்கள். இயல், இசை, நாடகம் ஆகிய முத்திறத்திலும் முதறிவுடையவர்கள் என்பது மிகையன்று. ஆதீன குல தெய்வமாக விளங்கும் ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் தமது திருக்கரமலரால் எழுதியுள்ள சிவஞான போத திராவிட மாபாடியத்தை மூன்று முறை பெயர்த்துக் காகிதப் பிரதி பண்ணியுள்ளார்கள். அருங்கலை விநோதர். எப்பொழுதும் இடைவிடாமல் வித்துவான்களுடைய மத்தியிலேயே விளங்குவார்கள் வித்துவான்களுக்குச் சம்மானம் செய்வதில் அவர்களைப் போஜன் என்றும், கர்ணன் என்றும் பாராட்டுவார்கள். திருவாவடுதுறை ஆதீனத்திலே சம்மானம் பெற்றவர்கள் வேறு இடங்களில் சென்று சம்மானம் பெற மனமில்லாதபடி வாரி வாரி வரிசையறிந்து வழங்குவார். புலவர்களை வரிசையறிந்து சம்மானம் செய்வதில் ஸ்ரீ அம்பலவாண தேசிகருக்கு முன்னும் பின்னும் கொடையாளிகள் இல்லை என்னலாம். இவர்கள் கொடைத் திறத்தை நினைத்தால் பழைய தமிழ் நூற் பாட்டுக்களெல்லாம் நினைவுக்கு வந்து இன்பம் செய்யும்.

# திருவாவடுதுறை ஆதீனம்

## 16. மேலகரம் சுப்பிரமணிய தேசிகர்

தமிழ்ப் பெருங் கவிஞராகிய மேலகரம்–திரிகூட ராசப்பக் கவிராயர் பரம்பரையில் அவதரித்தவர். இயல்பிலேயே தமிழார்வ மிக்கவர். ஸ்ரீ தாண்டவராயத் தம்பிரானிடத்துப் பல தமிழ் நூல்களைப் பாடங் கேட்டுச் சிறந்தவர். வித்தியாகுருவைத் தெய்வமாகவே மதித்தவர். ஆதீன குலதெய்வமாகவுள்ள ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகளைத் தமது வழிபடு கடவுளாகவே கொண்டு போற்றியவர். வித்துவான்களுடைய திறமையை நன்கு அறிந்து பாராட்டும் நுண்மாணுழைபுலமுடையவர். வடமொழிவாணர்களும், தமிழ்ப் பெரும் புலவர்களும் வாழத் தம் வாழ்நாளளவும் நன்கு வாழ்ந்தவர்கள். வித்துவான் தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகள் முகமாகப் பிள்ளையவர்களை அறிந்து ஆதீனத்து வித்துவானாகவும், மகா வித்துவானாகவும் கௌரவித்துப் போற்றிப் பாதுகாத்துத் தமிழகத்துக்குப் பெரிதும் பயன்படச் செய்தவர். சங்கீத வித்துவான்களுக்கெனத் தனி மதிப்புவைத்துச் சிறப்புக்கள் செய்தவர். உலகியல் நெறியிலும் அனுபவத்திலும் சிறந்தவர்களாகத் துறவரசென நல்லோர் மதித்துக் கொண்டாடுமாறு விளங்கியவர். 'நடையறுப் பெருந்துறவு' என அருளிய ஸ்ரீ சுவாமிகள் வாக்கு இவருக்குப் பொருந்தும். அரசியலாரும் மதிக்கும்படி ஆதீனக் காரியங்கள் இவர்கள் காலத்தில் விளக்கமுற்றன. அரசர்களும், பிரபுக்களும், பெரிய மனிதர்களும் அடிக்கடி வந்து தரிசனம் செய்து போற்றுவார்கள். சின்னப் பட்டத்திலுள்ள ஸ்ரீ நமச்சிவாய தேசிகர் காலத்திலே ஆதீனம் மிக உயர்ந்த நிலையை அடையும் என எதிர்பார்த்தவர்கள். உயர்ந்த இலக்கண இலக்கிய நூல்களையும் சித்தாந்த சாஸ்திரங்களையும் எப்பொழுதும் பாடஞ் சொல்லிக்கொண்டே இருந்தவர்கள். ஆதீன வித்துவான் ஸ்ரீ குமாரசாமித் தம்பிரானிடத்துக் கல்வி அறிவொழுக்கம் துறவு முதலிய நல்லியல்புகள் கண்டு அகலாமல் அவரைத் தம்பால் வைத்துக்கொண்டு போற்றியவர்கள். தம்பாலன்புடைய காசிவாசி —ஸ்ரீ இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வேண்டுகோளின்படி ஆதீன வித்துவான் ஸ்ரீ குமாரசாமித் தம்பிரானைத் (கி. பி. 1880—1894) திருப்பனந்தாள் காசி மடத்து அதிபராகக் கொடுத்து மகிழ்ச்சியடைந்தவர்கள். சின்னப் பட்டத்திலுள்ள ஸ்ரீ நமச்சிவாய தேசிகர் (கி. பி. 1883) சித்திரபானு வருஷம் தை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்திலே கல்லிடைக் குறிச்சியிலே சிவபரிபூரணம் அடைந்தார். அப்பொழுது ஞானாசிரியர் ஸ்ரீ சுப்பிரமண்ய தேசிகருக்கு உண்டான பெரு வருத்தம் அளவிடக் கூடியதன்று. திருவருளையும் குருவருளையுமே சிந்தித்திருந்து தம் வருத்தத்தைப் போக்கினார் என்ப. தமது அடியவர்களுட் சிறந்த ஆதீன வித்துவான் ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளைக் குன்றக்குடியிலுள்ள திருவண்ணாமலை ஆதீனத்துக்கு கி. பி. 1888-ல் தலைவராக அனுப்பினார்கள். தணிகைப் புராணம், பெரியபுராணம், மெய்கண்ட நூல்கள், பண்டார சாத்திரம் முதலியவைகளை நன்றாகப் பாடஞ் சொல்லும் வன்மையுடையவர் ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள்.

## 17. அம்பலவாண தேசிகர் 1888—1920.

மேலகரம்–ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் சிவபரிபூரணமான பின்பு ஞானபீடத்தமர்ந்தருளுவாராயினர் ஸ்ரீ அம்பலவாண தேசிகர். இவர் தமிழ்ப் பயிற்சி மிகுதியாக உடையவர். வடமொழியிலும் வல்லவர். சிறந்த நூல்களுக்கு வடமொழியிலே இவர் வழங்கியுள்ள சிறப்புப் பாயிரங்களில் அது இனிது புலப்படும். கல்லிடைக் குறிச்சி வித்துவான்—முத்து சாஸ்திரிகளிடம் வடமொழி பயின்றார். மகா வித்துவான்—பிள்ளையவர்களுக்குப் பின்பு இவ்வாதீன

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்




பட்டாடைகளுக்கும்

நூலாடைகளுக்கும்

சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,

53 கிடங்குத் தெரு, சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)